ஜம்மு காஷ்மீர் பகல்காமில் தீவிரவாத தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக புதுடில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பரமேஸ்வரன் அவர்களை முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ. கே. எஸ். விஜயன், சந்தித்து நலம் விசாரித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இச்சந்திப்பின் போது, தமிழ்நாடு அரசின் உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் குமார், பரமேஸ்வரன் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சுவால்பேட்டை யில் நடந்த கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் பேசினார். இதில் தலைமை கழக தீர்மான குழு உறுப்பினர் கவிஞர் தமிழ்தாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன், நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி, நகர அவைத் தலைவர் துரை.சீனிவாசன், நகர மன்ற தலைவர் லட்சுமி பாரி, மாவட்ட பிரதிநிதி ஏ.தமீன்அன்சாரி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. மருத்துவ அணி

நீலகிரி மாவட்ட மற்றும் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மருத்துவ அணியின் நீலகிரி மாவட்ட மற்றும் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

நீலகிரி மாவட்டம்

தலைவர் - ஆனந்தவள்ளி, எம்.பி.பி.எஸ்., 118, லாலீ காம்பவுண்ட், குன்னூர் - 643101.

துணைத் தலைவர் - ஜே. சுப்பிரமணி, எம்.பி.பி.எஸ்., 228, ப்ரூக்லாண்ட்ஸ், குன்னூர்.

அமைப்பாளர் - என்.பி. பவிஷ், எம்.பி.பி.எஸ்., எம்.டி., 2/392, இலத்தலார், உதகை.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. ரூபேஷ், டி.எம்.எல்.டி., 33, மவுண்ட் பிளசென்ட், குன்னூர். 2) சு. வினோத், சிடிடெக்னீசியன் 54, அப்பர் சர்ச் ரோடு, குன்னூர், நீலகிரி. 3) பி. ராமச்சந்திரன், ஜி.என்.எம். 23, காந்தி கிராமம், குன்னூர். 4) ஆர். உன்னிகிருஷ்ணன், டி.எம்.எல்.டி., 33, மவுண்ட் பிளசன்ட் குன்னூர்.

குன்னூர் சட்டமன்ற தொகுதி

அமைப்பாளர் - மைக்கேல், 326/4, பாலாஜி நகர், அருவங்காடு, குன்னூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜி. சாலினி , டி.எம்.எல்.டி., 3/6, ஓதநட்டி ஜெகதளா. குன்னூர். 2) எல். சாந்தி, சி.எம்.எல்.டி., 54, ஆழ்வார்பேட்டை, குன்னூர், நீலகிரி. 3) சி. உமாசங்கர், பி.எஸ்சி., டி.எல்.எம்.டி., 8344, விநாயகா அவென்யூ, ஜெகதளா, நீலகிரி. 4) ஏ. ஜென்சி, டி.எல்.எம்.டி., 3/265, லூர்துபுரம் வெலிங்டன், குன்னூர்.

உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி

அமைப்பாளர் - ஆர். நந்தகோபால், கலைஞர் கருணாநிதி காலனி, மஞ்சனக்கோரை, உதகை, நீலகிரி.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். ராய் செபாஸ்டின், டி.எல்.எம்.டி., 18, பாஸ்கோலின் பெர்னில் அஞ்சல், உதகை, நீலகிரி. 2) எம்.கீதா, டி.எல்.எம்.டி., 110, டேவிஸ்டேல் காம்பௌண்ட், உதகை, நீலகிரி.

கூடலூர் சட்டமன்ற தொகுதி

அமைப்பாளர் - நரேந்திரபாபு, எம்.பி.பி.எஸ்., டி.ஏ., லஷ்மி கிளினிக், ஸ்ரீராம் காம்ப்ளக்ஸ், கூடலூர், நீலகிரி.

துணை அமைப்பாளர்கள் - 1) லதா, டி.எம்.எல்.டி., லேப் கேர் ஆய்வகம், மசினகுடி, கூடலூர், நீலகிரி. 2) ஆபிரகாம், டி.எம்.எல்.டி., ஆல்பா ஆய்வகம், கூடலூர், நீலகிரி. 3) என். கலைச்செல்வன், பி.பார்ம், 11/210, ஓம் சக்தி கோவில் வீதி, எம்.ஜி.ஆர். நகர், கூடலூர், நீலகிரி.

"அண்ணா அறிவாலயம்" டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ.,
சென்னை - 18 செயலாளர்,
நாள்- 10-05-2025. தி.மு.க. மருத்துவ அணி

இந்திய ராணுவமும் - தி.மு.கழகமும்!

இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்த நாளிலும் ஒத்துப்போகாது என்பது, ஆண்டாண்டு காலமாக பலரால் நம்பப்படும் ஒரு கூற்றாகும். அதை நிரூபிக்கும் வகையில் தான் தற்போதைய சூழலும் நிலவி வருகிறது. கடந்த ஏப்ரல் 22ஆம் தேதி, பாகிஸ்தான் பயங்கரவாதிகள் பஹல்காமில் 26 பேரை சுட்டுக்கொன்றதை அடுத்து இந்தியா பதிலடி கொடுக்க முடிவு செய்தது. அதன் ஆரம்பம்தான், ஆப்ரேஷன் சிந்தூர். இதன்படி, கடந்த புதன் கிழமை நள்ளிரவில் பாகிஸ்தான் பயங்கரவாத முகாம்கள் மீது முதல் தாக்குதலை நடத்தியது இந்தியா. பாகிஸ்தான் மற்றும் பாக்., ஆக்கிரமித்திருக்கும் ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் இந்த தாக்குதலானது நடந்தது. இந்த நிலையில், பாகிஸ்தானும் பதில் தாக்குதலை நிகழ்த்தி இருக்கிறது.

தேசபக்தியில் அன்றும் இன்றும் என்றும் முன்நிற்பது தமிழகம்தான் என்பதைப் பெருமைமிகு பேரணி மூலம் செயல்வடிவில் நிகழ்த்தித் தேச ஒற்றுமைக்குத் தோள்தந்து நிற்கிறது திராவிட இயக்கம்.

சைதை **சாதிக்**
தலைமைக் கழகப் பேச்சாளர்

- 1962ஆம் ஆண்டு சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை எதிர்கொள்வதில் பண்டித நேரு அவர்களுக்குத் துணை நின்றார்கள்.
- 1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பு கண்டனத் தீர்மானம்,
- 1972ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின் போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி, போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நிதி மற்றும் நிலம்,
- 1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது இந்தியாவிலேயே அதிகத் தொகையை, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கியவர் தலைவர் கலைஞர்! மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்த அதேவேளையில் நாட்டின் பாதுகாப்பு என்று வருகிறபோது கை கொடுத்தவர் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியாரும் துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதியாரும் தேசபக்தியின் புதிய உச்சங்களாகத் தேச ஒற்றுமையின் திராவிடத் தூண்களாகக் களம் கண்டு இராணுவத்திற்குத் துணைநிற்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க பேரணியை நடத்திக்காட்டி உறவுக்குக் கைகொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்! என்ற கலைஞரின் தாரக மந்திரத்தை மீண்டும் ஒருமுறை செயலில் காட்டி இருக்கிறார் நம்முடைய திராவிட மாடல் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ●

விழுப்புரம் வடக்கு மாவட்டம் - ஒலக்கூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

கழக அரசின் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

செஞ்சி மஸ்தான் - தாம்பரம் ஏகாம்பரம் - ராஜாராம் சிறப்புரை!

திண்டிவனம் மே 12. விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் வடம் பூண்டி பெரப்பேரியில்நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.,தலைமை கழக பேச்சாளர் தாம்பரம் ஏகாம்பரம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர்மேற்கு ஒன்றிய திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் வடம் பூண்டி பெரப் பேரிகலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய துணை பெருந்தலைவர் ராஜாராம் தலைமை தாங்கினார்.ஒன்றிய நிர்வாகிகள் அமராவதி, சுப்பிரமணி, ஆர்.காளி,அன்பரசி ஜெயபிரகாஷ் திருஞானசம்பந்தம் அரிகிருஷ்ணன், கே .காளி, மணி, முன்னால் ஊராட்சி மன்ற தலைவர்கள்சுப்பிரமணி இளங்கோவன் முன்னாள் கிளை செயலாளர் சாமுவேல் கிளை செயலாளர் கமலேஷ் விநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் கிளை செயலாளர்கள்ஜெகன், சேட்டு ஆகியோர் அனைவரும் வரவேற்றனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் தாம்பரம் பி.வி.ஏகாம்பரம் விழுப்பு ரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு கழக ஆட்சியின் நான்கு ஆண்டு சாதனைகளை எடுத்துரைத்தனர். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் ,மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மனோ சித்ரா ராஜேஸ்வரன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் அண்ணாதுரை, துணை அமைப்பாளர் மாரிமுத்து ,முன்னாள் மாவட்ட இலக்கிய அணி தலைவர் குமரவேலன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் நெடுஞ்செழியன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஹேமநாதன், லோகேஷ், தினேஷ்குமார், சக்திவேல், மணிகண்டன், சுர்ஜித், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பணி நிர்வாகிகள் பார்த்திபன், குணவேல் கனிமொழி, ஏழுமலை, உள்ளிட்டஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், திமுக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் கிளை கழக செயலாளர் நீல கண்டன் நன்றி கூறினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மானூர்மன்னார் சாமி கோவில் கலைஞர் திடலில் நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார் .உடன் தலைமை கழக பேச்சாளர் செங்கல்பட்டு சீனிவாசன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் ,மரக்காணம் மேற்கு ஒன்றியசெயலாளர் பழனி,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

விழுப்புரம் (தெற்கு) மாவட்டக் கழகத்தின் சார்பு அணிகளில் காலியாக உள்ள மாவட்ட அமைப்பாளர்கள் , மாவட்ட தலைவர்கள் , மாவட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணைத் தலைவர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கும் விரும்ப மனுக்களை விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணியிடம் வழங்கினர். உடன் ஒன்றிய செயலாளர் ஜி.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் - தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில்

நிலையான வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி போர் பாதுகாப்பு ஒத்திகைப் பயிற்சி!

மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் - காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் பங்கேற்பு!

தூத்துக்குடி, மே 12- தூத்துக்குடி மாவட்டம் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய வளாகத்தில் நிலையான வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி போர் பாதுகாப்பு ஒத்திகைப் பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம் பகவத், தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், முன்னிலையில் நேற்று முன்தினம் (10.05.2025) மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

மேற்படி, தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய வளாகத்தில் எதிர்பாராத விதமாக ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட துறைகள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து போர் பாதுகாப்பு ஒத்திகைப்பயிற்சி நடைபெற்றது. இதில், துறைமுகத்தில் உள்ள கப்பலில் எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்படும் பட்சத்தில் முதலில் அபாய சங்கு ஒலித்து, போர்க்கால பாதுகாப்பு வழிமுறைகளில் முதற்கட்டமாக அவசர கால அறிவிப்பு வெளியிடப்பட்டதைத்தொடர்ந்து, பாதிக்கப்பட்ட இடத்தில் பணியிருந்த தொழிலாளர்கள் அங்கிருந்த கூடுகை இடத்திற்கு சென்றவுடன் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் துறைமுக தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைத்து, கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது, தொடர்ந்து, விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களை தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை வீரர்கள் மீட்டு, துறைமுக ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவத்துறை ஆம்புலன்ஸ் மூலமாக தூத்துக்குடி துறைமுக மருத்துவமனைக்கு முதலு தவிக்காகவும், மேல்சிகிச்சைக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்வது குறித்து உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

விழுப்புரம் மாவட்டம் வளவனூர் அருகே உள்ள அற்பிசம்பாளையம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற திரௌபதி அம்மன் கோவில் தீமிதி திருவிழாவில் அதே பகுதியை சேர்ந்த பழனி ,பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட சிலர் நிலைத்தடுமாறி தீயில் விழுந்து காயம் ஏற்பட்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்களை விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இலட்சுமணன் நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறி, மருத்துவமனை அதிகாரிகளிடம் இது தொடர்பாக உடல்நிலை குறித்து கேட்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார். ஒன்றிய செயலாளர் வி.ஜி.பிரபாகரன், ஊராட்சி மன்ற தலைவர் முரளி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.